பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 23 சனிக்கிழமை 07.09.2024 கதிர் 304

# வீடுவீடாக நடத்தும் பரப்புரைக்கு தடை

## பொலிஸாருக்கு உத்தரவிட்டது தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக வீடு வீடாக செல்வதை உடனடியாக தடை செய்யுமாறு பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று உத்தரவிட்டது.

இவ்வாறான தேர்தல் பிரசாரம் செய்யப்படுவதை தடை செய்ய பொலிஸார் நடமாடும் ரோந்து பணியை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு, குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் வீடுவீடாக சென்று வருகின்றமை தொடர்பாக தமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தது. இவ்வாறான செயல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்கிற முடிவை அறிவித்துள்ள நிலையில், சஜித் வெற்றிபெற்றதன் பின்னர் இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வை நடைமுறைப்படுத்துவது ☞ 2

## ஊவா மாகாணத்திற்கு புதிய ஆளுநர் நியமனம்

ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராக அனுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ.ஜே.எம்.முஸம்மில் பதவி விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்காக அனுர விதான கமகே இவ்வாறு நியமிக்கப் பட்டுள்ளார்.

உடனடியாக அமுலக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். ☞ 2

## புதிய வகை உரப்பயன்பாடு தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு

2024 சிறு போகத்தில் சுற்றுச்சூழலுக்கு நட்பான உரப் பாவனை மூலம் பெற்றுக் கொண்ட விளைச்சல் கணக்கெடுப்பு வேலைத்திட்டத்தை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு நேரடியாகப் பார்வையிட்டது.

சுற்றுச்சூழலுக்கு நட்பான உரப் பாவனை மூலம் பெற்றுக்கொண்ட நெல் விளைச்சல் கணக்கெடுப்பு வேலைத்திட்டத்தை பார்வையிடுவதற்கு கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு கம்பஹா (மினுவாங்கொட) பகுதியில் கண்காணிப்பு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டது.

சுற்றுச்சூழலுக்கு நட்பான உரங்களை இந்நாட்டின் விவசாயத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது குழுவின் நோக்கமாக இருந்ததுடன், அந்த உரங்களை பிரதான நெல் உற்பத்தி செய்யும் பகுதிகளில் பரிசோதிக்க வேண்டும் எனவும் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

2023/2024 பெரும் போகத்தில் சுற்றுச்சூழலுக்கு நட்பான உரம் பயன்படுத்தி வெலிகந்த மற்றும் தெஹியத்தகண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரி பயிர்ச்செய்கையின் வெற்றிகரமான விளைச்சலை கண்காணித்ததன் பின்னர் குழுவின் தலைவர் ☞ 2



## அநுரவை வெல்ல வைப்பதற்காகவே ரணில் தேர்தலில் களமிறங்கியுள்ளார்

### முஜிபுர் ரஹ்மான குற்றச்சாட்டு

தேசிய மக்கள் கூட்டணியின் வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்க வெல்வதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதற்காகவே சுயேச்சை வேட்பாளராக ரணில் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார். அவர்கள் இருவரும் பிரதானமாக சஜித் பிரேமதாஸவையே தாக்கிப் பேசுகின்றனர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ☞ 8

## எல்பிட்டிய உள்ளாட்சி தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்திய பெரமுன

எல்பிட்டிய உள்ளூராட்சி சபைக்கு போட்டியிட ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் அதன் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்ட தரப்பினர் கட்டுப்பணம் செலுத்தினர்.

அதற்கான கட்டுப் பணத்தை ஏற்கும் பணி ஓகஷ்ஸ்ட் 26 தொடங்கிய போதிலும் நேற்றுவரையில எந்தவொரு கட்சியோ குழுவோ கட்டுப் பணத்தை வைப்பிலிடவில்லையென தேர்தல் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டது.

அதன்படி, கட்டுப்பண தொகையை ஏற்றுக் கொள்வது செப்டம்பர் 11 மதியம் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டது.

## சஜித்தை ஆதரிக்கும் தீர்மானம் முறைப்படியாக எடுக்கப்பட்டதே

### மீண்டும் விளக்கமளிக்கிறார் சி.வி.கே.சிவஞானம்

சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று எடுத்த தீர்மனம் முறைப்படி எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக மீண்டும் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டிய தேவை இல்லை. கூட்டம் நடைபெற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியில் அவர் இவர் என ☞ 8

## குணமடைந்தவரை மீண்டும் நோயாளியாக்க தகுதியற்ற வைத்தியர்கள் தயார் நிலையில்

### எதிர் வேட்பாளர்களைச் சாடுகிறார் ரணில்

குணமடைந்த நபரை மீண்டும் நோளாளியாக்குவதற்கு தகுதியற்ற வைத்தியர்கள் தயாராக உள்ளனர். அவர்களில் பிரயோசனமற்ற மருந்தை அவர் குடித்தால், அந்த நோயாளியை மீண்டும் குணப்படுத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற உள்நாட்டு வைத்தியர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரிய, ஆயுர்வேத, சித்த, யூனானி, ஹோமியோபதி வைத்தியர்கள், உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், ☞ 2

## வரிசை யுகத்தை ஏற்படுத்தியது யார்? செப். 21க்குள் ஆதாரத்தோடு விவரம்

### நாமல் ராஜபக்ச சொல்கிறார்

2022 ஆம் ஆண்டு அரகலயவுக்குள் இருந்த வரை இடைக்கால ஜனாதிபதியாக்கினோம். வரிசை யுகத்தை உருவாக்கியது யார், முடிக்கு கொண்டு வந்தது யார் என்பதை செப்டெம்பர் 21 க்கு முன்னர் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துவோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன ☞ 8

## மக்களுக்காக உணர்வோடு செயற்படும் தலைவரே தேவை

### ஐ. ம. ச. அதற்குத் தயார் என்கிறார் இம்தியாஸ்

கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்காக உணர்வுடன் செயற்படுகின்ற தலைவரே நாட்டுக்கு அவசியம். அவ்வாறானதொரு தலைவரை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாரென, நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெவிததார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை கட்டியெழுப்ப சரியான நோக்கு, வேலைத்திட்டம், குழு என்பன அவசியமாகும். அந்த சரியான நோக்கு, வேலைத்திட்டம், சிறந்த குழு, என்பன ஐக்கிய மக்கள் கூட்டணியில் காணப்படுகின்றன. அத்தோடு கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் எதிர்பார்புகளை நிறைவேற்றுபவர்களை ஆட்சியில் அமர்த்துகின்ற யுகத்தை உருவாக்க மக்கள் இந்த முறை ஜனாதிபதி ☞ 8

## இனிமேல் கைதுதான்

### அமைச்சர் டிரான் எச்சரிக்கை

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் அவசியமற்ற வகையில் சுற்றித் திரிபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தில் கடவுச்சீட்டு விநியோகத்தை மேற்பார்வை செய்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடவுச்சீட்டு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ☞ 2

## இனி இது .....

என்பது தொடர்பான அடிப்படை இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

"தேர்தலுக்கு முன்னர் அவர்கள் என்ன யோசனையோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்து, தீர்வு தொடர்பில் பெறக்கூடிய சில வாக்குறுதிகளுக்கு முயற்சிக்கின்றோம்" என்று தமிழ் அரசுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் இந்தப் பேச்சுத் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச தனது தேர்தல் அறிக்கையில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் வரையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருக்கிறார். அதிகாரங்கள் மீளப்பெறமுடியாத வகையில் பகிரப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

1. மாகாணங்களுக்கு அதியுச்ச அதிகாரப் பகிர்வு. அதுவரை 13ஆம் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும்

2. பகிரப்பட்ட அதிகாரங்கள் மத்தியினால் மீளப் பெறப்பட மாட்டாது

3. வெகு விரைவில் மாகாணசபைத் தேர்தல்கள்

4. வடக்கு கிழக்கு மாகாணங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாடு.

5. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படும்

6. புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்.

ஆகியவை அவரது வாக்குறுதிகளாகத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. அவர் கூறுகின்ற புதிய அரசமைப்பு என்ன என்பது அது எப்படிப்பட்டத் தீர்வை வழங்கும் என்பது குறித்து அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்படவில்லை.

சமஷ்டி பற்றி சஜித்தின் தேர்தல் அறிக்கையில் நேரடியாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் பகிரப்படாத அதிகாரங்கள் மத்தியினால் மீளப்பெறப்படமாட்டாது என்ற வாக்குறுதிதான் சமஷ்டியின் அடிப்படைக்கூறு. அது இருந்தாலே சமஷ்டிதான் என்று கூறிவருகின்றார் சுமந்திரன். அந்த வகையில் தீர்வு தொடர்பில் என்ன திட்டங்களை முன்வைக்கப்போகிறார்கள் அல்லது சஜித்திடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்கிற விவரங்களை தேர்தலுக்கு முன்னரே பேசி முடிவெடுக்கவே இப்போதைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடாளுமன்றத்தின் கடந்த கூட்டத் தொடரின்போது சஜித் பிரேமதாசவுடன் இது தொடர்பாகப் பேசப்பட்டிருக்கின்றது. அவருடன் எட்டப்பட்ட சில அடிப்படை எல்லைகளுக்குள் (யழிவிஷ்உ லிற்மியிஷ்ஜஎ) தீர்வு குறித்து மேலும் தெளிவுபடுத்தும் வகையில் தமிழ் அரசுக் கட்சி செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் நேற்று வவுனியாவில் சஜித்தின் பிரதிநிதியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடன் பேச்சு நடத்தினர்.

சஜித் பிரேமதாசவின் பரப்புரை நடவடிக்கைகளுக்காக கடந்த ஒரு வார காலமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஜி.எல்.பீரிஸ் வவுனியாவிற்கு வந்த இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பேச்சுக்களில் என்ன ஆராயப்பட்டது என்கிற விவரம் முழுமையாகத் தெரியவரவில்லை என்றாலும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான அடிப்படையாக, சந்திரிகா அம்மையாரால் முன்வைக்கப்பட்ட பிராந்தியங்களின் சுயாட்சி தொடர்பான தீர்வுத் திட்டத்தை ஆராய்வது தொடர்பிலும் நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகிறது. இது தொடர்பில் மேலதிக தகவல்கள் கிட்டும்போது அதையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

இருந்தாலும் பேராசிரியர் பீரிஸ் இத்தகைய காத்திரமான முயற்சிகளுக்கான நம்பகமான ஒருவரா என்பது குறித்து எனக்கு பலமான சந்தேகம் உள்ளது. அவர் சந்திரிக்கா அம்மையாரின் காலத்திலிருந்து தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். பேச்சுக்களில் அரச தரப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டிருக்கிறார். ஆனால் எடுப்பார் கைப்பிள்ளைபோன்று அந்தந்த அரச தலைவர்களின் போக்குக்கு ஏற்ப தலைகீழாக நடக்கும் பண்புகொண்டவர் அவர். சந்திரிக்கா காலத்தில் பிராந்திய சுயாட்சிக்கு இணங்கி வேலை பார்த்த அவர், பின்னர் மகிந்தவின் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வாக 13ஐக்கூடக் கொடுக்கமுடியாது என்கிற ராஜபக்சக்களின் நிலைப்பாட்டையும் வெட்கமின்றிக் காவித் திரிந்தவர்.

விடுதலைப் புலிகளுடனான ஒஸ்லோ அறிக்கைப் பேச்சுக்குழுவிலும்கூட பீரிஸின் பங்கு பணி இருந்தது. இனப்பிரச்சினைக்கு எந்த எல்லைவரைக்கும் சென்று ஒருதீர்வைக் காண்பதற்கு முயற்சிகள் நடந்தன என்பது குறித்த தெளிவான அறிவும் பார்வையும் அவருக்கு உண்டு. ஆனாலும் இந்தியாவில் சுப்பிரமணியம் சுவாமி போன்று இங்கே பீரிஸும் இது விடயத்தில் மிக மோசமான கேவலமான நிலைப்பாடுகளையே தாறுமாறாக எடுத்து, வெளிப்படுத்தி வந்திருக்கிறார். அவரை நம்பி இத்தகைய காத்திரமான முயற்சிகளில் ஈடுபடமுடியுமா என்பதை தமிழ் அரசுக் கட்சி சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். பீரிஸ் போன்ற ஒரு பச்சோந்தியை நம்பி களத்தில் இறங்கினால் அதோ கதிதான். கறிவேப்பிலை போன்று பீரிஸை பயன்படுத்திவிட்டுத் தூக்கி வீசிவிடமுடியுமே தவிர, அவரை பிரதான பாத்திரமாக வைத்து தீர்வு முயற்சிகளை நகர்த்த முற்படக்கூடாது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வீடுவீடாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமான முறையில் நடத்தப்படும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பாக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்துள்ளது.

## புதிய வகை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவ டீ. வீரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் 2024 சிறு போகத்தில் ஏழு மாகாணங்கள் மற்றும் 'பி.' 'சி.' மற்றும் 'எச்' ஆகிய மகாவலி வலயங்களில் சுற்றுச்சூழலுக்கு நட்பான உரம் பயன்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய இந்தக் கண்காணிப்புச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை நாடாளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழு அலுவலக அதிகாரிகள் மற்றும் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, கமத்தொழில் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம், விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை, தேசிய உரச் செலயகம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மற்றும் மேல்மாகாண கமத்தொழில் திணைக்களம் என்பவற்றின் அதிகாரிகள் இந்தக் கண்காணிப்பு சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டனர்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேல்மாகாண சபையின் வேலைத்திட்டம் மேல்மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் விளைச்சல் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. வேலைத்திட்டத்தின் முழுமையான ஒருங்கிணைப்பை அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம் மேற்கொண்டிருந்தது.

## இனிமேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகள் மாத்திரமே குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். பிரச்சினைகள் ஏதும் கிடையாது. கடந்த 23 ஆண்டுகளாக எந்த விதமான விலைமனுக்கோரலும் இல்லாமல் ஒரு வெற்றுக் கடவுச்சீட்டு 5.99 டொலருக்கு குறித்த ஒரு தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

இலத்திரனியல் முறைமையிலான கடவுச்சீட்டு அமுல்படுத்துவதற்கான யோசனை பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னிலையான தரப்பினரிடமிருந்து உலகளாவிய ரீதியில் விலைமனுக்கோரல் ஊடாக கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

புதிய கடவுச்சீட்டுக்களைபெற்றுக்கொள்ளும் வரை கடவுச்சீட்டு விநியோகம் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது. அவசரமாக பழைய முறைமையின் கீழ் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதாயின் மேலதிகமாக 896 மில்லியன் ரூபாவை செலவிட நேரிடும்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்காக திணைக்களத்துக்கு வந்து வரிசையில் காத்திருப்பதை தவிர்ப்பதற்காக நிகழ்நிலை முறைமை ஊடாக திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் முறைமையை அறிமுகப்படுத்தினோம்.

ஒரு தரப்பினர் 100 சிம் அட்டைகளை பயன்படுத்தி வெவ்வேறு பெயர்களில் பதிவு செய்து அவற்றை பொதுமக்களுக்கு 45 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யும் மோசடிகள் இடம்;பெற்றன. இதனை தடுப்பதற்காகவே நிகழ்நிலை முறைமை ஊடான வசதியை இரத்து செய்தோம்.

கடவுச்சீட்டுக்கான டோக்கன் விநியோகிக்கும் பணி பொலிஸாருக்கு பொறுப்பாக்கப் பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் அவசியமற்ற வகையில் சுற்றித் திரிபவர்கள் கைது செய்யப்படுவார்கள். திணைக்களத்தின் வளாகத்தில் மக்கள் கூட்டம் அதிகம் என்பதைக் காண்பிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள் என்றார்.

## குணமடைந்தவரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகர்கள் மற்றும் உள்நாட்டு மருத்துவத் துறையினர் ஆகியோர் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர். உள்நாட்டு மருத்துவத்துறையின் முன்னேற்றத்துக்கான யோசனையும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு சிகிச்சைக்காக என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நோயாளி தற்போது எழுந்து நடக்கிறார். குணமடைந்த நபரை மீண்டும் நோளாளியாக்குவதற்கு தகுதியற்ற வைத்தியர்கள் தயாராக உள்ளனர். அவர்களில் பிரயோசனமற்ற மருந்தை அவர் குடித்தால், அந்த நோயாளியை மீண்டும் குணப்படுத்த முடியாது.

அதனால் அந்த மருந்தை குடிப்பதா இல்லையா என்பதை குணமடைந்த நபரே தீர்மானிக்கவேண்டும். எவ்வாறாயினும் நோயாளியை மேலும் கஷ்டத்தில் தள்ளிவிடாமல் காப்பாற்ற வேண்டும் என்தே எமது நோக்கமாகும்.

ஒரு நாட்டுக்கு இப்படி ஒரு நோய் வருவது நல்லதல்ல. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நோயாளிக்கு சிகிச்சை அளிக்க வெளியில் இருந்தும் சில வைத்தியர்களை வரவழைக்க வேண்டியிருந்தது.

வொஷிங்டன், டோக்கியோ உள்ளிட்ட 18 நாடுகளில் இருந்து மருத்துவர்களை அழைத்து வந்தோம். இப்போது புதிய வைத்தியர் ஒருவர் வந்திருக்கிறார். அவர் தரப்போவதாகச் சொல்லும் மருந்துகளை பார்க்கும்போது பயமாய் இருக்கிறது. அது குறித்து முழுநாடும் தீர்மானம் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பல கோரிக்கைகளை முன்வைக்கப்பட்டதோடு அவற்றை செயல்படுத்துவது குறித்து ஆலோசிகிறோம். உள்நாட்டு மருத்துவ முறைகளைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். ஜே.ஆர். ஜயவர்த்தனவின் காலத்தில் டபிள்யூ.ஜே.பெர்னாண்டோ தலைமையில் சுதேச மருத்துவம் தொடர்பான முதலாவது குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் அவ்வாறான அறிக்கைகள் எவையும் வரவில்லை.

உள்நாட்டு மருத்துவ முறையில் பாரம்பரிய மருத்துவர்களும், ஆயுர்வேத பீடத்தில் பட்டம் பெற்றவர்களும் உள்ளனர். கடந்த காலங்களில், சுதேச மருத்துவம் மிகவும் வெற்றிகரமாக இருந்தது. அதற்கான மதிப்பும் கிடைத்தது. இந்த சுகாதார முறமைகள் இலங்கையிலும் தெற்காசிய நாடுகள் முழுவதிலும் 1000, 2000 ஆண்டுகள் பரலாகக் காணப்பட்டது.

இப்போது இந்தியா உள்நாட்டு மருத்துவம் குறித்து அதிகளவில் ஆராய்ச்சிகளை செய்து வருகிறது. இலங்கையில் அது நடக்கவில்லை. எனவே உள்நாட்டு மருத்துவம் தொடர்பிலான ஆய்வுகளையும்ம், அதன் வரலாறுகள் தொடர்பிலான ஆய்வுகளையும் மேற்கொண்டு இந்த துறையை மேலும் முன்னோக்கி கொண்டுச் செல்வோம்.

இதற்காக பாரம்பரிய வைத்தியர்களையும் ஒன்றிணைக்கவேண்டும். அவர்களுக்கும் அங்கீகாரம் வழங்கவேண்டும். அதேசமயம் ஜோதிடத்தையும் இதனுடன் இணைக்கவேண்டும். இவை அனைத்தும் பின்னிப் பிணைந்தவை. இவற்றை பிரிக்க முடியாது. அதற்கு அமைவாக புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இந்தத் துறைகள் அனைத்தையும் அங்கீகரித்து அவற்றைப் பதிவு செய்ய புதிய சட்டமொன்றை கொண்டு வர எதிர்பார்க்கிறோம்.

இந்தப் பணிகளை முன்னெடுக்க ஆயுர்வேதத் திணைக்களம் மாத்திரம் போதாது. ஆயுர்வேதம் தொடர்பான தேசிய சபையொன்றை நிறுவுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக நீண்டகாலத் திட்டங்களையும் ஐந்தாண்டுத் திட்டத்தையும் வகுக்க எதிர்பார்க்கிறோம்.

அதற்கேற்ப, சுதேசவைத்தியத் முறையின் மறுசீரமைப்பு குறித்து புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. அனைத்துப் பிரிவினரையும் ஒன்றிணைத்து இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளை ஆரம்பித்து முன்னோக்கிக் கொண்டு செல்வோம்.

ஆயுர்வேத மருத்துவத்திற்கு, மருத்துவ அறிவியலாக அங்கீகரிப்பை பெற்றுக்கொடுப்பதே எனது நோக்கம். அதன்படி, இந்த மருத்துவ முறைகளைத் தேடி சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகிறார்கள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுவதற்கு சாணக்கியனுக்கு எந்தவித அருகதையும் இல்லை

**வர்ணகுலசிங்கம்**



தமிழ்பொதுவேட்பாளர்தொடர்பில் பேச சாணக்கியனுக்கு எந்த அருகதையும் இல்லை எனத் தெரிவித்த வடமராட்சி வடக்கு கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் முன்னாள் உபதலைவரான வர்ணகுலசிங்கம், தமிழ் மக்களை முழுமையாக நேசிக்கும் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

தமிழ் பொது வேட்பாளரை சாணக்கியன் தேவையில்லாமல் விமர்சிக்கக்கூடாது. எங்களின் பிரச்சி னையை தீர்க்காமல் வைத்துக்கொண்டு எம்மை விற்கிறீர்கள். தென்னிலங்கை கட்சிகளோடு சேர்ந்துநின்றுகொண்டுதமிழரை பிரித்தாள்கிறீர்கள். ஆனால், காலப்போக்கில் இதற்கெல்லாம் மக்கள் பதில் சொல்வார்கள். வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டுவரப்பட்டவர்தான் தமிழ் பொது வேட்பாளர். ஆகவே தமிழ் பொது வேட்பாளரை விமர்சனம் செய்ய உங்களுக்கு எந்த அருகதையும் இல்லை.

கடந்த 15 வருடங்களாக தென்னிலங்கை கட்சிகளுக்கு அடிமையாக இருந்ததை தவிர நீங்கள்சாதித்ததுஎன்ன? பொருள்களின் விலைகளை எல்லாம் ஏற்றி மக்களை பொருளாதார சுமையில் தவிக்கவிட்டு பன்முகப்படுத்தப்பட்டநிதி என்று அரசிடம் கோடி கோடியாகவாங்கிஎன்ன செய்கிறீர்கள். நாடு அதல பாதாளத்துக்கு போயிருக்கிறது என்றால், இந்தக் காசு எங்கிருந்து வந்தது? மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையை யாவது குறைத்தீர்களா?

தமிழ் பொது வேட்பாளரைஒன்றிணைந்துநிறுத்திய அரசியல் கட்சிகள் இன்று என்ன செய்கின்றன?

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியொன்று இன்னும் பிரசாரத்தில் முழுமையாக இறங்கவில்லை. அக்கட்சியின் இளம் உறுப்பினரிடம் கேட்டபோது கட்சி மேலிடத்திலிருந்து இன்னும் உத்தரவு வரவில்லை என்று கூறியிருக்கிறார். இப்படியான அரசியல் கட்சிகளை தானே நீங்கள் எல்லோரும் இணைத்துவைத்துள்ளீர்கள்.

இன்றுஎல்லோரும்மக்கள்மத்தியில்முழுமையாக இறங்கி வேலை செய்ய வேண்டும். பிரச்சார பயணமொன்றில் நானும் ஈடுபட்டிருந்த வேளை மக்களிடம் பொது வேட்பாளர் விடயத்தை கூறிய போது இது எப்போதோ செய்திருக்கவேண்டிய வேலை. ஆனால், இப்போதாவது செய்துள்ளீர்கள் என ஆதரவளித்துள்ளனர். உண்மையில் இந்த விடயம் தொடர்பில் கிராமங்களில் தெளிவற்ற நிலையே காணப்படுகிறது. தேர்தலுக்கு குறுகிய நாட்களே இருக்கும் நிலையில் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பிலான பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். தமிழ் இரத்தம் ஓடுகின்ற எவனும் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிக்கவும் மாட்டார்கள். தேர்தல் வேலை செய்யவும் மாட்டார்கள்.

இலங்கையில் இருக்கிற தமிழ் மக்களாக இருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம், எங்களுக்காக குரல் கொடுக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம்... எல்லோரும் இணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் உரிமை கிடைத்து தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என நினைக்கின்ற சிங்கள மக்களும் சங்கு சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு ஆதரவளிக்க வேண்டும்.

இன்று தமிழ் அமைப்புகள் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக நின்று தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்திருக்க வேண்டும். எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை வெல்ல வைக்க சங்கு சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.(05)

# போலி எரிவாயு வரிசையை உருவாக்கி காணொளி எடுக்க முயன்றவர் கைது

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசையாக நிற்பது போன்று போலியான வரிசை ஒன்றை உருவாக்கி அதனை காணொளியாக எடுக்க முயன்றவர்களை தடுப்பதற்கு தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திகன பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில் வசிக்கும் சுமார் 50-60 தொழிலாளர்கள் அடங்கிய குழு ஒன்றுக்கு தலா 2,500 ரூபா வீதம் கொடுத்து இந்த போலி வரிசையை உருவாக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் இந்த போலி வரிசையை உருவாக்கி அதனை காணொளிகளாக எடுக்க முயன்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பின்னர், போலி எரிவாயு வரிசையில் காத்திருந்த பெண்கள்மற்றும்ஆண்களைஅந்தஇடத்தில்இருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு அனுப்ப தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள் மற்றும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(05)




# கட்டுநாயக்கவில் சீன பிரஜை கைது

சீனாவில் பாரிய அளவில் பண மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் சர்வதேசபொலிஸாரால்நீலஎச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த சீன பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய சீன பிரஜை ஒருவரேஇவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சீனாவில் பாரிய அளவில் பண மோசடி செய்துள்ள நிலையில் அந்நாட்டு பொலிஸாரால் தேடப்பட்டுவருவதாகதெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கடந்த 03 ஆம் திகதி மாலைதீவில் இருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தைவந்தடைந்துள்ள நிலையில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு பின்னர் அவரை புதன்கிழமை 08.35 மணியளவில் எமிரேட்ஸ் விமானத்தின் மூலம் மாலைதீவுக்கு நாடு கடத்தியுள்ளனர். (05)

# மியன்மாரிலிருந்து மீட்கப்பட்ட 20 இலங்கையர் நாடு திரும்பினர்



மியன்மாரில் உள்ள சைபர் மோசடி முகாம்களிலிருந்து மீட்கப்பட்ட மேலும் 20 இலங்கையர்கள் வியாழக்கிழமை மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இந்த 20 இலங்கையர்களில் 16 ஆண்களும் 04 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் வியாழக்கிழமை இரவு 11.09 மணியளவில் தாய்லாந்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில், மேலும் 28 இலங்கையர்கள் மியன்மாரில்உள்ளசட்டவிரோதசைபர்முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன்அவர்களைமீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மியன்மாரில் உள்ள சட்டவிரோத சைபர் முகாம்களில் 56 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 8 பேர் கடந்த மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# நாகை - காங்கேசன் கப்பல் சேவையில் திடீர்த் தடங்கல்

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணத்தில் ஈடுபடும் கப்பலானது வியாழக்கிழமை பயணத்தில் ஈடுபடவில்லை.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தகப்பல்சேவைஉத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் வியாழக்கிஸ்ரீழமை காலை நாகைப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை குறித்த கப்பல் வந்தடைந்தது.

இவ்வாறு வந்த கப்பலானது காங்கேசன்துறையில் இருந்து நாகை பட்டினத்திற்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு தயாரானது. இந்நிலையில், பயணிகளும் கப்பலில் ஏறி பயணத்திற்கு தயாராக இருந்தனர்.

இருப்பினும், கப்பலில் போதிய அளவு எரிபொருள் இன்மையால் குறித்த பயணம் இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் பயணத்திற்கு தயாராக இருந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெறும் தேர்தல் வாக்குறுதியாக இல்லாமல் இருந்தால சரிதான்

**நாட்டில் இன்று பெருமளவான போதைப்பொருள் கடத்தல்களின் பின்னணியில் அரசியல்வாதிகளே இருக்கின்றனர். ஆட்சிக்கு வந்ததும், போதைப்பொருள் கூட்டணி அடியோடு துடைத்தெறியப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

**இலங்கையில் போதைப்பொருள் கட்டத்தல் மற்றும் வியாபாரத்தின் பின்னணியில் அரசியல்வாதிகளே இருக்கின்றார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த பரகசியம். இலங்கையை போதைப் பொருள்களின் போக்குவரத்து மையமாக மாற்றியதில் அவர்களுக்குத்தான் கணிசமான பங்கிருக்கின்றது. போதைப் பொருட்கள் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கியும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கியும் செல்வதற்கான பண்டமாற்று இடமாக இலங்கைவளர்வதற்குமுழுக்காரணமாகவும்இருந்தவர்கள் அரசியல்வாதிகள்தான். அதிலும் மிகவும் அரசியல் செல்வாக்கும் அதிகாரமும் கொண்டவர்கள்.**

**தான் ஆட்சிக்கு வந்தால் இவர்கள் மீதுதான் கைவைப்பர் என்று அநுரகுமார தெரிவித்திருக்கின்றார். அது சாத்தியம்தானா? வெறும் தேர்தல்கால வாக்குறுத்திக்காக அநுர இதனைச் சொல்லியிருக்கக்கூடாது என்று விரும்புகின்றோம். ஏனெனில் தலையைச் சிதைக்காமல் இந்தப் போதைப் பொருள் பேரரக்கனை ஒருபோதும் ஒழிக்கமுடியாது.**

**இப்போதும், ரணில் ஆட்சியில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்ககப்படுவதாகப் பரப்புரை செய்யப்படுகின்றது. நாளாந்தம் 'யுக்திய' சுற்றிவளைப்புக்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அவர்களில் 90 சதவிதத்தினர் போதைப்பொருள் பயன்பாட்டாளர்கள். இன்னும்சொல்லப்போனால்போதைப்பொருள்அடிமைகள். இன்னும்கொஞ்சம்பேர்போதைப்பொருளுக்குஅடிமையாகி அதன் காரணமாகவே போதைப் பொருள் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்கள். போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அவர்களின் உதவியாளர்கள் என்று பெருந்தலைகள் ஒருசில மட்டுமே இதுவரையில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.**

**அந்தத் தலைகளுக்குத் தலைகளான அரசியல்வாதிகள் எவரையும் நெருக்கக்கூட முடியவில்லை இந்த ஆட்சியாளர்களால். யார் தடை போட்டாலும், எத்தகைய உயர் ஆபத்து வந்தாலும் போதைப் பொருள் கடத்தல்காரர்களை வேட்டையாடும் பணி ஓயாது என்று பொலிஸ் மா அதிபராக இருந்தபோது தேசபந்து தென்னக்கோனும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் என்னதான் வாய்ச்சவடால் விடுத்தாலும், வீரவசனங்கள் பேசினாலும் அவர்களால் ஒரு அரசியல்வாதியைக்கூட இதுவிடயத்தில் நெருங்கக்கூடமுடியவில்லைஎன்பதேயதார்த்தம். உண்மை.**

**இந்த நிலையில் அநுரவின் அறிவிப்பும் அத்தகைய ஒன்றாக அமைந்துவிடக்கூடாது. போதைப்பொருளை ஒழிக்கவேண்டுமானால் முதலில் அரசியல்வாதிகளில் இருந்து அதனைத் தொடங்கவேண்டும். அதற்கான துணிச்சலும் திறமையும் அநுரவிடம் இருக்கிறதா என்பது அவர் வெற்றிபெற்றால் இரண்டு மூன்று மாதங்களுக்குள் தெரிந்துவிடும்.**

**"போதைப்பொருள்கடத்தலில்சம்பாதிக்கப்படும்பணம்தான் இன்று பல அரசியல்வாதிகளின் பரப்புரைகளுக்குப் பயன்படுகின்றது. போதைப்பொருளின் பின்னணியில் அரசியல்வாதிகளே உள்ளனர்.**

**எனவே நான் ஆட்சிக்கு வந்ததும், போதைப்பொருள் குழுக்கள் அடியோடு துடைத்தெறியப்படும். இந்த உத்தரவாதத்தைநான்மக்களுக்குஉறுதியுடன்தருகின்றேன்" என்றிருக்கிறார் அநுர. அப்படி நடந்தால் மகிழ்ச்சிதான். இது வெறும் தேர்தல்கால வாக்குறுதியாக இல்லாமல் இருக்கவேண்டும்.**



## தள்ளிப் போடுவதைத் தள்ளி வைப்போம்

**ராதாகிருஷ்ணன்**

வாழ்க்கையை நேசிப்பவர்கள் நேரத்தை வீணடிக்கமாட்டார்கள். நேரத்தைவீணடிக்காதவர்கள், தூங்கும் கண்ணில் ஒளி இல்லை, துள்ளி நடந்தால் வலியில்லை என்பதையுணர்ந்து, நல்ல செயல்களை முனைப்புடன் ஆரம்பித்து, அவற்றை தள்ளிப் போடாதவர்களே வாழ்க்கையில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

தாம் ஆற்றவிருக்கும் காரியங்களைத் தள்ளிப் போடுதல் அல்லது ஒத்திப் போடுதல், செய்ய வேண்டிய கடமைகளைத் தாமதப்படுத்துதல் என்பது இப்போது அனைவருக்கும் பொதுவான பிரச்சினையாகிவிட்டது. படிக்கும் மாணவர்கள், அன்றன்று பாடங்களைப் படிக்காமல், தேர்வுக்கு முந்தைய நாள் வரை படிப்பதை தள்ளிப் போட்டு, தேர்வன்று பதற்றத்திற்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகிறார்கள்.

அதை செய்கிறோம். அதைப் போல, நாம் நினைத்த ஒரு செயலை செய்யாமல், பிறகு பார்த்துக் கொள்ளலாம் எனத் தள்ளிப் போடுவது, அப்போது நமக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாதது போல இருக்கலாம். ஆனால், அதுவே கொஞ்சம் கொஞ்சமாகஒருபழக்கமாகமாறிவிடும். காலச்சூழலில் அந்தப் பழக்கம் நமக்கே தெரியாமல் நம்முடைய குணங்களில் ஒன்றாகி விடுகிறது. தம்மளவிலேயே பழக்கமாக்கிக்கொண்ட சிலவகை நடைமுறைகளில், செயல்பாடுகளைத் தள்ளிப் போடுவதும் ஒருவரின் குணமாகிவிடும்.

நாம் ஏற்கெனவே செய்த காரியங்களில் தவறு ஏதேனும் இருப்பதாக உணரப்பட்டால், அதனை அப்போதே சரி செய்து விட வேண்டும். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டால், அது ஞாபக மறதிக்கு வழிவகுக்கும். அத்தவறு சரி செய்யாமலே போய்விட்டால், பெரும் பிரச்சினைக்கு வழிவகுக்கக் கூடும்.



நாம் ஒருவருக்கு ஒரு உதவியோ, நன்மையோ செய்ய வேண்டுமென்றால், அதை நாளை செய்யலாம், நாளைக்கு மறு நாள் செய்யலாம், இன்னொரு நல்ல நாள் பார்த்து செய்யலாம் என்று தள்ளிப் போடாமல், 'நல்லது' என்று எண்ணுவதை உடனே செய்து விட வேண்டும். ஏனென்றால், நல்ல காரியத்தை செய்வதினால் எவரும் துன்பம் அடைய மாட்டார்கள். மேலும், நாளை என்பதுநம்கையில்இல்லை. நாளை என்பது இன்றைய நாளின் தொடர்ச்சியே. ஆனால், அந்த நல்ல செயல் நாளைக்கும் நம் மனதில் தோன்றும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது.

அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள், பணிகளைத் தாமதப்படுத்தி, செய்யும் பணியில் அக்கறையின்றி செயல்படுவதால் பணியில் சுமையேற்பட்டு வேலை பளு அதிகரிக்கத் தொடங்குகிறது. இதனால், மன உளைச்சல் ஏற்பட்டு, அதிகாரிகளின் கண்டிப்புக்கு உள்ளாகி, குற்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டிய சூழ்நிலையையும் ஏற்படுத்துகிறது. அதனால், முடிந்தவரை தம் வேலைகளைத் தள்ளிப் போடாமல் சீக்கிரம் முடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே திட்டமிட்ட நேரத்தில் ஒரு செயலைச் செய்யாமல், தள்ளிப் போடுவதால், அச்செயலின் தாக்கம் அதிகமாகி, அதை முடிக்க முடியாமல் தடுமாறுகிறோம். பின்னர், அச்செயல் நம் கையை விட்டு நழுவிவிடுகிறது. அந்த நல்ல வாய்ப்பு வேறொருவரால் பறிக்கப்பட்டு விட்டு விடுகிறது. இதனால், இறுதியில் நமக்கு அவமானமே மிஞ்சுகிறது.

காலம் கடந்த பிறகு செய்தது தவறு என்று உணர்ந்து, மன வருத்தத்துடன் இறுதியில் நமக்கு விரக்தியே மிஞ்சும். தள்ளிப்போடுவதை சிலர் விதியின் மீது பழி சொல்லியும் தப்பித்துக் கொள்வர். நாம் தினமும் ஆற்றும் ஒவ்வொரு செயலும், பழக்கத்தின் அடிப்படையிலேயே அமைந்து இருக்கிறது. அவ்வாறு அன்றாடம் நாம் தன்னிச்சையாக செய்யும் செயல்பாடுகள் நாம் இளமையிலேயே பிறரிடமிருந்து கற்றுக் கொண்டவை அல்லது நம் பெற்றோர்களால் சொல்லிக் கொடுக்கப்பட்டவை. இதே போல, ஒரு செயலை செய்யாமல், காலம் கடத்துவதும், தள்ளி வைப்பதும் கூட பழக்கத்தினால்தான் ஏற்படுகிறது.

காலம் கடத்துவதை, அன்றாட பழக்க வழக்கங்களைநாம்யோசித்துசெய்வதில்லை. அதற்கு நாம் சிரமப்படுவதுமில்லை. தன்னிச்சையாகவே

நம்மைத் தாழ்த்துவதும், உயர்த்துவதும் நமது எண்ணங்கள்தான். நாம் செய்ய நினைத்த செயலை நிர்ணயித்த காலகெடுவுக்குள் செய்யாமல் தள்ளிப் போடுவதற்கு முக்கிய காரணம், அந்த செயலை செய்வதற்கான ஆர்வமின்மை, நாட்டமின்மை நம்மிடையே இல்லாமல் போவதுதான். எனவே, முடிந்தவரை அந்தச் செயலை செய்வதற்கான ஆர்வத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒருவர் நாளைப் பார்த்துக் கொள்ளலாம் என்று படிப்பதைத் தள்ளி போட்டால், அதுவே அவருக்குப் பழக்கமாகி, படிப்பதிலும் சிரமமேற்பட்டு, பொழுது வீணே கழியும். அந்நேரம் மீண்டும் வராது.

நாம் செய்ய வேண்டிய வேலை எளிமையாக இருந்தாலும், கடினமாக இருந்தாலும், நாளை செய்து கொள்ளலாம், நேரம் கிடைக்கும்போது பார்த்துக் கொள்ளலாம் எனத் தள்ளி வைப்பது வெற்றியாளர்களின் குணமல்ல. அது சோம்பலின் அறிகுறி. தள்ளிப் போடுவதால் ஏற்படும் சாதக, பாதகங்களை ஆராய்ந்து, நற்காரியங்களைத் தள்ளிப் போடுவதைத் தவிர்த்து விட வேண்டும். கூடுதல் நன்மை தரும் பட்சத்தில், ஒரு செயலை மேலும் செம்மைப்படுத்த தள்ளிப் போடுவதில் தவறில்லை.

வாழ்க்கை எப்போதும் முன்னெச்சரிக்கை கொடுக்காது. இயற்கையும், காலமும் நாளுக்கு நாள், நொடிக்கு நொடி தன்னைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது. நேற்று இருந்ததைப் போல இன்று இல்லை. இன்று இருப்பதைப் போல நாளை இருக்கப் போவதில்லை. எனவே, எக்காரியத்தையும் அன்றே முடித்து விடாமல் தள்ளிப் போடக் கூடாது.

# போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியாளர் வியாழனன்று கைது

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'வனாத்தே தினுக்க' என்பவரின் உதவியாளர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 550 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'வனாத்தே தினுக்க' என்பவரின் முக்கிய உதவியாளர் ஒருவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




# இரு மாணவர்கள் ராகமையில் மாயம்

ராகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் இரண்டு பாடசாலை மாணவர்கள் காணாமல் போயுள்ளனர் என ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம படுவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 11 மற்றும் 13 வயதுடைய இரு மாணவர்களே காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன மாணவர்கள் இருவரும் கடந்த 04 ஆம் திகதி ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்துள்ள நிலையில் திடீரென காணாமல் போயுள்ளனர் என அவர்களது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இனந்தெரியாத 4 நபர்களால் தாக்கப்பட்ட 8 பேர் காயம்

## கொடகமவில் சம்பவம்

பிபில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடகம பிரதேசத்தில் இனந்தெரியாத நான்கு நபர்களால் தாக்கப்பட்டு 06 பெண்கள் உட்பட 08 பேர் காயமடைந்துள்ளனர் என பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தன்று, சந்தேக நபர்கள் நால்வரும் மது போதையிலிருந்துள்ளனர் எனத் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

06 பெண்கள் உட்பட 08 பேர் கொண்ட குழுவொன்று கொடகம பிரதேசத்தில் உள்ள கிணறு ஒன்றில் குளித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது, அவ்வழியாக சென்ற இனந்தெரியாத நான்கு நபர்கள் குளித்துக் கொண்டிருந்த பெண்களைப் புகைப்படம் எடுத்துள்ளனர்.

இதனால், இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ள நிலையில் வாக்குவாதம் எல்லை மீறியதில் இனந்தெரியாத நான்கு நபர்களால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய மூவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மாங்குளத்தில் கண்ணிவெடி வெடித்ததில் நான்கு பெண் பணியாளர்கள் படுகாயம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம்-துணுக்காய் பகுதியில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் நால்வர் கண்ணிவெடி விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வெடிவிபத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த நான்கு பெண் பணியாளர்களே படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் 43 , 40 , 39 வயதுடையவர்கள் என்பதுடன் இவர்களில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு துறைமுகத்தில் ஜூலையில் கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடு

## நீதிமன்ற உத்தரவின் கீழ் அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அண்மையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மனித எலும்புக்கூட்டின் பாகங்கள் கண்டறியப்பட்ட நிலையில், கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைவாக அதனைத் தோண்டும் பணிகள் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

கொழும்பு துறைமுக நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டத்துக்காகக் கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலுக்குஅண்மையில்அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த வேளையில், அங்குத் தலை வேறாகவும், முண்டம் வேறாகவும் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து அப்பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்ட நிலையில், அப்பகுதியை அகழ்வதற்கு அவசியமான நிதி நீதியமைச்சினால்ஒதுக்கீடுசெய்யப்பட்டதுடன், அகழ்வுப்பணிகளை வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்ற புதன்கிழமை உத்தரவு பிறப்பித்தார்.

அதற்கமைய வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி பண்டார தலைமையில் தொல்லியல் நிபுணர் ராஜ் சோமதேவா, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஹேவகே, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான ஜெ.தற்பரன், பொலிஸ் உயரதிகாரிகள், பொதுமக்கள் சார்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் மனித உரிமைகள், அபிவிருத்திக்கான நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் அப்பகுதியை அகழும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்போது ஏற்கனவே கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூட்டின் எச்சங்கள் முழுமையாகத் திரட்டப்பட்டு, அப்பகுதி சுத்தம் செய்யப்பட்டதுடன் வியாழக்கிழமை அகழ்வுப்பணி நிறைவடைந்தது. இந்நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) அப்பகுதியில் மீண்டும் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இது இவ்வாறிருக்கப் பல வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் வைத்தியசாலை ஒன்றும், பாதுகாப் புப்படையினருக்குச் சொந்தமான முகாம் ஒன்றும் (காலப்பகுதி சரிவர உறுதிப்படுத்தப்படவில்லை) இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



# இரு பஸ்கள் மோதி பிபிலயில் விபத்து

## 47 பேர் காயம்

பிபில - லிந்தகும்புர பிரதேசத்தில் இரு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ் விபத்தில் 47 பேர் காயமடைந்துள்ள நிலையில், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிபில மெதகம பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலையை பணியாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸொன்றும் அதே வீதியில் அதே திசையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# போலி நாணயத்தாள்களுடன் நபரொருவர் கைதானார்

போலிநாணயத்தாள்களைவைத்திருந்தநபரொருவர் தெமட்டகொடை பொலிஸாரால் செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடைபொலிஸ்பிரிவிற்குட்பட்ட வெலுவான பிரதேசத்தில் வியாழக்கிழமை இரவு பொலிஸாரால் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, அக்குரஸ்ஸ, ஹேனேகம பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 5,000 ரூபா பெறுமதியான 62 நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஓட்டோ சாரதியின் சடலம் கால்வாயிலிருந்து மீட்பு

மிரிஹான மாதிவெல வெல்சிறிபுர பிரதேசத்தில் ஓட்டோ பழுது பார்க்கும் நிலையம் ஒன்றிற்கு அருகில் உள்ள கால்வாயிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கோட்டை மாதிவெல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய ஓட்டோ சாரதியொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கால்வாயினுள் விழுந்து கிடந்துள்ள நிலையில் அவரது ஓட்டோ கால்வாயிற்கு அருகில் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# காணாமல்போன 4 மாணவர்களும் நோர்வூட் பகுதியில் கண்டுபிடிப்பு

நுவரெலியா, நோர்வூட் வென்சர் தோட்டத்தில் வசிக்கும் நான்கு பாடசாலை மாணவர்கள் கடந்த 04 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்த நிலையில் ராகம பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 15 வயதுடைய நான்கு பாடசாலை மாணவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த மாணவர்கள் நால்வரும் கடந்த 04 ஆம் திகதி புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளனர்.

பின்னர், காணாமல் போன மாணவர்களின் பெற்றோர்கள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் காணாமல் போன மாணவர்கள் நால்வரும் ராகம பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் நால்வரும் வேலை வாய்ப்பு தேடி ராகம பிரதேசத்திற்குச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மாணவர்கள் நால்வரும் ராகம பொலிஸாரின் தலைமையில் அவர்களது பெற்றோர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்நெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்நெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இபலோகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 42 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் போதைப்பொருள்களுக்கு அடிமையானவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கல்நெவ மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இருந்து வாட்ஸ்அப் ஊடாக போதைப்பொருட்களை கொள்வனவு செய்வதாக பொலிஸ் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.(05)

# 843 கி. பீடி இலைப் பொதிகள் புத்தளத்தில் அதிரடியாக மீட்பு



புத்தளம், சிலாபம் மைக்குளம் பிரதேசத்தில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பின் போது 843 கிலோ 950 கிராம் நிறையுடைய 28 பீடி இலை பொதிகள் மற்றும் 25 கிலோ கிராம் அம்மோனியம் பைகார்பனேட் பொதி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மைக்குளம் மதுவரி திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் கல்முனைவாசி கைது

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வியாழக்கிழமை இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 9400 சிகரட்டுகள் அடங்கிய 47 சிகரெட்டு கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொலிஸ் நிலைய தடுப்பு கூண்டில் உயிர் மாய்க்க முயன்றவர் மீட்பு

திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலைய கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளதாக பூகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

8 ஆயிரம் ரூபா பெறுமதியான 20 அன்னாசி பழங்களை திருடிய சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலைய கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவரே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இவர் தனது மேல் சட்டையை பயன்படுத்தி பொலிஸ் நிலைய கூண்டினுள் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் இவரை காப்பாற்றி தோம்பே வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)



## குணமடைந்தவரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது இந்தியாவில் செயற்படுகிறது. அந்த முறையை நாமும் பின்பற்றவேண்டும். நமது சுதேசவைத்திய முறையின் அறிவியல் அடிப்படையைக் கண்டறிந்து செயற்படுவது மிகவும் முக்கியம்.

அதற்காக ஆராய்ச்சிகள் அவசியம். மேலும், சுற்றுலாத்துறைக்காக இத்துறை, நவீனமயமாக்கப்பட்டு பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தாய்லாந்து போன்ற நாடுகளில் உள்ள ஒரு பெரும் ஹோட்டலுக்குச் செல்லும்போது, அங்கு ஆயுர்வேத சிகிச்சையைப் பெறலாம். இதே திட்டத்தை நாமும் எதிர்காலத்தில் செயல்படுத்த வேண்டும். எனவே, சுற்றுலாத் துறையில் ஆயுர்வேதமருத்துவம்சேர்க்கப்படவேண்டும். இது அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட நமக்கு உதவுகிறது. இன்று சென்னை போன்ற இடங்களில் ஜோதிட முறையும் உருவாகியுள்ளது.

இந்தமரபுகள்அனைத்தையும்இணைத்து இந்தத் துறையை நாம் முன்னேற்ற வேண்டும். எனவே ஆயுர்வேத தேசிய சபையை எவ்வாறு நிறுவுவது என்பது குறித்து எங்களுக்கு ஆலோசனை தேவை. அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் வகையில் இந்த சபையை நிறுவுவது அவசியமாகும் - என்றார்.

## சஜித்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக்கொண்டு இருந்தால் கூட்டத்தை நடத்த முடியாது. வந்த உறுப்பினர்கள் மத்திய செயற்குழு உறுப்பினர்கள். அவர்கள் எடுத்த தீர்மானம் சரியாகும்.

எடுத்த தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்றால்அதனைச்சொல்வதற்குஅவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை அவர்கள் சொல்லலாம். ஆனால் கட்சி தீர்மானம், உரிய கோரத்துடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் எனவே அந்த தீர்மானம் வலுவான தீர்மானம் என்றார்.

## மக்களுக்காக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் செயற்பட வேண்டும்.

இன்றுஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் குழுவும்சஜித்பிரேமதாசவின்குழுவும்ஒன்றாக இணைவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் வடிவமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஏகமனதான தீர்ப்பின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது.

நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மிகவும் கடினமானபோராட்டங்களைபலவருடங்களாக முன்னெடுத்தோம்.போராட்டத்தின்முடிவாகவே ஐக்கிய மக்கள் சக்தி உருவெடுத்தது என்றார்.

## வரிசை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

குளியாப்பிட்டியில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே நாமல் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019 பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கோட்டபய ராஜபக்ச தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல் சூழ்ச்சியினால் எமது ஆட்சி வீழ்த்தப்பட்டது. பங்களாதேஸ் நாட்டின் நிலைமைதான் 2022 ஆம் ஆண்டு இலங்கையிலும் நிலவியது.

அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச அவருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கொல்லுதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை. எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பதவி விலகினார்.

தேசியத்தையும், நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அரகலயவுக்குள் இருந்தவரை இடைக்காலஜனாதிபதியாகதெரிவுசெய்தோம்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு எடுத்த சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கினோம். எமது ஒத்துழைப்புடன் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது நாங்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

தேசியத்துக்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தேன். எக்காரணிகளுக்காகவும் நாட்டுக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை என்றார்.

## அநுரவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் பரப்புரை மேடையொன்றில் சஜித் பிரேமதாஸவினால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்கமுடியாது என்று கூறுகின்றார். இதனூடாக எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் தான்வெல்லப்போவதில்லைஎன்பதைரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

அதேபோன்று ரணில் விக்ரமசிங்க இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வெல்லும் நோக்கில் களமிறங்கவில்லை என்று நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். ஏனெனில் அவர் வெல்வதை விடவும், சஜித் பிரேமதாஸவைத் தோற்கடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றார். சஜித் பிரேமதாஸவினால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்கமுடியாது என்று கூறுவதன் ஊடாக சஜித்தின் வெற்றிக்காகப்பணியாற்றுவோரைஉளவியல் ரீதியில் சோர்வடையச்செய்வதற்கே அவர் முற்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல்களில் 'ஒப்பந்த' அடிப்படையில் செயற்படும் போலி வேட்பாளர்கள் பலர் களமிறங்குவார்கள். அடுத்த வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு ஏதுவானபாதையைஉருவாக்கிக்கொடுப்பதே அந்த போலி வேட்பாளர்களின் பணியாக இருக்கும். அவ்வாறுதான் இம்முறை ரணில் விக்ரமசிங்க செயற்படுகின்றார்.

அவர்அநுரகுமாரதிஸாநாயக்கவெல்வதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதற்காகவே தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார். ரணில் விக்ரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் பிரதானமாக சஜித் பிரேமதாஸவையே தாக்கிப்பேசுகின்றனர்.

அதேபோன்று தபால்மூல வாக்களிப்பு தினத்துக்கு முன்னைய தினம் இரவு அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில்நடைபெற்றஒருமணிநேரநிகழ்ச்சியில் அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டார். உண்மையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது சாத்தியமா?

அநுர வெல்வதற்கு அவசியமான பின்னணி, வசதிவாய்ப்புக்கள்அனைத்தையும் ரணில் விக்ரமசிங்க பெற்றுக்கொடுப்பதையே இதுகாண்பிக்கின்றது. அடுத்தசிலவாரங்களில் ரணில் அநுரவையோ, அநுர ரணிலையோ சாடிப்பேசமாட்டார்கள். மாறாக இருவரும் இணைந்து சஜித் பிரேமதாஸவைத் தூற்றுவார்கள்.

அடுத்தாக வடக்கில் மக்கள் முன்பு உரையாற்றுகின்ற அநுரகுமார திஸாநாயக்க, 'தெற்கில்மக்கள்விரும்பும்மாற்றத்துக்குஎதிராக நின்றதாகநீங்கள்அடையாளப்படுத்தப்படுவதை விரும்புகின்றீர்களா?' எனக் கேட்கின்றார். அதாவது அவர்களுக்கு (தேசிய மக்கள் சக்திக்கு) ஆதரவான நிலைப்பாட்டை தமிழ் மக்கள் எதிர்க்கக்கூடாது என்ற எச்சரிக்கையே அதுவாகும்.

அதுமாத்திரமன்றி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மேற்கொண்ட தீர்மானத்தையும் அவர் கேள்விக்கு உட்படுத்துகின்றார். இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானவையாகும்.

ஆகையினாலேயே மக்கள் விடுதலை முன்னணிஇன்னமும்மாற்றமடையவில்லை என்றுநாம்தொடர்ச்சியாகக்கூறிவருகின்றோம். எனவே இது குறித்து நாட்டுமக்கள் விழிப்புடன் செயற்படவேண்டியதுஅவசியமாகும்-என்றார்.





# மன்னாரில் கவனிப்பாரற்ற நிலையில் தனிநாயகம் அடிகளார் நினைவுத் தூபி



மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழ் வளர்த்த பெருந் துறவியான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவு சிலை காகங்களின் எச்சத்தினால் அசுத்தம் செய்யப்பட்டு கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் என்கிற சேவியர் தனிநாயகம் அடிகளார் ஈழத்தமிழர்களின் தமிழ் வளர்ச்சி பாதுகாப்பில் பெரும் பங்காற்றி தமிழுக்காக உயிர் நீத்தவர் ஆவார்.

அவரது தியாகம் உலகறியும் வகையில் மன்னார் மாவட்டத்தில் சில வருடங்களுக்கு முன்பு தனிநாயகம் அடிகளாரின் நினைவு சிலை அமைக்கப்பட்டு அவரது நினைவேந்தல் தினங்களில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது குறித்த நினைவுச்சிலை கவனிப்பார்அற்ற நிலையில்,காகங்களின் எச்சத்தில் அசுத்தப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.(05)

# சங்கானையில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் கொள்ளை

யாழ்ப்பாணம் - சங்கானை பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகள் உடைத்து பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கானை தேவாலய வீதியில் உள்ள மூன்று வீடுகள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# தனக்குத் தானே தீ மூட்டியவர் சிகிச்சை பலனின்றி இறப்பு

தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக தனக்கு தானே தீ மூட்டினார் என கடந்த 03ஆம் திகதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

(05)

# சட்டவிரோத மதுபானத்துடன் பமுனுகமவில் ஒருவர் கைது

கம்பஹா, பமுனுகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

பமுனுகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 1,012 லீற்றர் சட்டவிரோத மதுபானம் (135 போத்தல்கள்) கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2024இல் வெளியிடப்பெற்றது